1980 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஒன்றியங்களின் பிரிவினைகள் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன. இப்போது நாம் செய்து கொண்டிருக்கும் ஏற் பாடு 18 வயதுக்குள்ளாக அனைவரையும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்ற பணியும் பெண்கள் அரி சனங்கள் மற்றும் பிற்பட்ட மக்களுக்கு எவ்வளவு இடம் என்ற வகையிற் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

திரு. ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து சில பகுதிகளையும், நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து சில பகுதிகளையும் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேர்ப்பதும், திருப்பத்தூர் ஊராட்சியில் இருந்து சில பகுதிகளை நாட்ராம்பள்ளி ஒன்றியத்தில் சேர்ப்ப தான திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்தை அரசு எப்போது செயல்படுத்தும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே தேர்தலுக்கு முன்னாலே செயல் படுத்தாது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே அமைச்சர் அவர்கள் புதிய ஊராட்சி ஒன்றியம் அமையும் என்றார்கள். அப்படி அமைக்கப்படுகின்ற ஒன்றியத்தினுடைய பெயர் என்ன? ஜவ்வாது மலையில் உள்ள சில பகுதிகளைச் சேர்த்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படும் என்று சொன் னார்கள். அப்படி இந்த ஒன்றியம் மலையில் ஆரம்பிக்கப்படுமா என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திலேயிருந்து 13 ஊராட்சிகள் நாட்ராம்பள்ளி மற்றும் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ் வொன்றிலிருந்தும் 3 ஊராட்சிகள்; மொத்தம் 19 ஊராட்சிகள் அதோடு சேர்க்கப்பட்டு வாணியம்பாடி ஒன்றியம் என்று அதற்குப் பெயர் வைக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்திருக்கிறார்.

திருத்தணி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றல்.

*வினா எண். 131—திரு. ஆர். சண்முகம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் உத்தேசம் உண்டா :

(ஆ) ஆம் எனில், எப்போது நகராட்சியாக்கப்படும் :

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சென்ற நிதி நிலை அறிக்கையில் சில பேரூராட்சிகள், நகராட்சிகளாக மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இது வரையில் அந்த அறிவிப்பு அமல் படுத்தப்படவில்லை. இளையான்குடி, கீழக் கரை போன்ற பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தற் பொழுது அரியலூர், கள்ளக்குறிச்சி, திருக்கோயில், பெருந்துரை ஆகியவைகள் நகராட்சியாக அறிவிக்கப்படும் தருவாயில் இருக் கின்றன. மற்றவைகளைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் விளக்கம் சொல்லப்படும்.

தெள்ளார் ஒன்றியம்.

*வினா எண். 132—திரு. ப. சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் தெள்ளார் பஞ்சாயத்து யூனியனை தெள்ளார், தேசூர் என இரண்டாகப் பிரிக்கக்கோரி அப் பகுதி பொதுமக்களிடத்திலிருந்து கோரிக்கை வரப்பெற்று ள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சித் தேர்தலுக்கு முன் இவ்விதமான ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கும் செயற் குறிப்பை அரசு பரிசீலிக்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ப. சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, ஊராட்சி ஒன்றியம் பெரியதாக இருப்பதால் நிர்வாகம் சிறப்பாக நடைபெற முடியவில்லை என்பதால் இந்தக் கோரிக்கை மூன்றாண்டுகளுக்கு முன்பு வைக்கப்பட்டது. அந்தக் கோரிக்கை இன்னும் நிறைவேறாமல் இருக்கிறது. இந்தக் கோரிக்கையைப் பொதுமக்கள் வலியுறுத்துகிறார்கள். எனவே, அரசு இதை மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.